மே 2020

விண்மீன் .காம்

# முதலாம் வார நடப்பு நிகழ்வுகள்

01 மே – 07 மே

www.winmeen.com

# நடப்பு நிகழ்வுகள்

**1.எத்தனை மாநிலங்களின் நீர் பகிர்வு தொடர்பான சர்ச்சைக்கு தீர்வுகாண, காவிரி நீர் மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டது?**

அ. இரண்டு

ஆ. மூன்று

**இ. நான்கு ☑**

ஈ. ஐந்து



❖ தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்ககளுக்கு இடையே காவிரியாற்று நீரைப்பகிர்வது தொடர்பான சர்ச்சைக்கு தீர்வுகாண்பதற்காக, இந்திய அரசு, கடந்த 2018ஆம் ஆண்டில் காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.

❖ அண்மையில், இதற்கு முன் நீர்வளம், ஆறுகள் மேம்பாடு மற்றும் கங்கை புத்துயிர்ப்பு அமைச்சகத்தின் கீழிருந்த இவ்வாணையம் அதிகாரப்பூர்வமாக ஜல் சக்தி அமைச்சகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த ஆணையத்துடன், கோதாவரி ஆறு மேலாண்மை வாரியம் & கிருஷ்ணா ஆறு மேலாண்மை வாரியம் ஆகியவை ஜல் சக்தி அமைச்சகத்தின் நீர்வளம், ஆறுகள் மேம்பாடு & கங்கை புத்துயிர்ப்புத் துறையின்கீழ் கொண்டுவரப்படுகின்றன.


**2.மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ், 2020ஆம் ஆண்டு நிலவரப்படி, அதிக எண்ணிக்கையிலானோருக்கு வேலைவாய்ப்பு வழங்கியுள்ள மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

ஆ. கேரளா

**இ. சத்தீஸ்கர் ☑**

ஈ. உத்தர பிரதேசம்




❖ அதிகாரப்பூர்வ அறிக்கையின்படி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ், முன்னனுபவமற்ற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் மாநிலங்களின் பட்டியலில், சத்தீஸ்கர் மாநிலம் முதலிடத்தில் உள்ளது. நாடு முழுவதும் இந்தத் திட்டத்தின்கீழ் பணிபுரியும் மொத்தம் 77.85 இலட்சம் தொழிலாளர்களுள், 18.51 இலட்சம் தொழிலாளர்கள் சத்தீஸ்கரைச் சேர்ந்தவர்களாவர். அது சுமார், 24% ஆகும். மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 14 சதவீதத்துடன் ராஜஸ்தான் இரண்டாவது இடத்திலும், 12 சதவீதத்துடன் உத்தர பிரதேசம் மூன்றாவது இடத்திலும் உள்ளது.

**3.எந்தப் பன்னாட்டு அமைப்புக்கு, இந்தியாவின் அடுத்த நிரந்தர பிரதிநிதியாக T S திருமூர்த்தி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்?**

அ. உலக சுகாதார அமைப்பு

**ஆ. ஐக்கிய நாடுகள் அவை ☑**

இ. உணவு & வேளாண் அமைப்பு

ஈ. பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு



- மூத்த இந்திய வெளியுறவு சேவையை அதிகாரியான T S திருமூர்த்தி, ஐக்கிய நாடுகள் அவையின் அடுத்த தூதராக அல்லது இந்தியாவின் நிரந்தர பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தற்போது, வெளியுறவு அமைச்சகத்தில் செயலராக (பொருளாதார உறவுகள்) பணியாற்றிவருகிறார். இம்மாதத்தில் பணி ஓய்வுபெறவுள்ள சையத் அக்பருதீனுக்கு பதிலாக அவர் இந்தப் பொறுப்பை ஏற்கவுள்ளார். இந்த நியமனத்திற்கு முன்னதாக, T S திருமூர்த்தி அவர்கள், இந்தியாவின் வெளிவிவகாரங்கள் தொடர்பான பல்வேறு பதவிகளை வகித்துள்ளார்.

**4. NIP தொடர்பான பணிக்குழு, சமீபத்தில், தனது அறிக்கையை மத்திய நிதி அமைச்சரிடம் சமர்ப்பித்தது. NIP'இல் 'I' என்பது எதைக் குறிக்கிறது?**

அ. முதலீடு

**ஆ. உட்கட்டமைப்பு ☑**

இ. தொழிற்துறை

ஈ. தன்னாட்சி



- தேசிய உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான பணிக்குழு (NIP) 2019–25 காலக்கட்டத்துக்கான தனது இறுதி அறிக்கையை, மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம், புது தில்லியில் வழங்கியது. இந்தப் பணிக்குழுவின் 2019–2025 காலகட்டத்துக்கான சுருக்க அறிக்கையை நிதியமைச்சர் கடந்த 2019 டிச.31 அன்று வெளியிட்டார். நாட்டில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களில் ₹100 இலட்சம் கோடி செலவிடப்படும் என்று 2019–20 பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டிருந்தது.

- தேசிய உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான பணிக்குழுவை உருவாக்குவதற்கு, ₹100 கோடி மதிப்புக்கும் மேற்பட்ட அனைத்து பெரிய திட்டங்களும் (கிரீன்பீல்டு அல்லது பிரவுன்பீல்டு, அமல்நிலையில் உள்ள அல்லது திட்டமிடல் நிலையில் உள்ள) சேர்க்கப்பட்டுள்ளன. 2020–25 நிதியாண்டு காலகட்டத்தில் ₹111 இலட்சம் கோடி மதிப்பில் முதலீடுகளை செய்யக்கூடிய கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டங்கள் தேசிய உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான பணிக்குழுவின் இறுதி அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளன.

**5. International Budget Partnership (IBP) நடத்திய ஒளிவுமறைவில்லா வரவுசெலவுத் திட்ட ஆய்வின்படி, வரவுசெலவுத் திட்டத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியாவின் தரநிலை என்ன?**

**அ. 53 ☑**

ஆ. 62

இ. 82

ஈ. 98

- International Budget Partnership (IBP) நடத்திய ஒளிவுமறைவில்லா வரவுசெலவுத்திட்ட ஆய்வினை சமீபத்தில் வெளியிட்டது. இது, வரவுசெலவுத்திட்டத்தின் வெளிப்படைத்தன்மையின் அளவை 0–100 என்ற அளவில் மதிப்பிடுகிறது. 87 மதிப்பெண்களுடன் நியூசிலாந்து முதலிடத்தில் உள்ளது. இந்தப்

பட்டியலில், வரவுசெலவுத்திட்டத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் அடிப்படையில் 117 நாடுகளுள் இந்தியா 53ஆவது இடத்தில் உள்ளது.

❖ இது, இந்தியாவின் மத்திய வரவுசெலவுத்திட்டத்தின் செயல்முறைக்கு 49/100 மதிப்பெண்களை வழங்கியுள்ளது. அதேவேளை, உலகளாவிய சராசரி 45 என்ற அளவில் உள்ளது. இந்த ஆய்வறிக்கை, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களால் விவாதிக்கப்படக்கூடிய வரவு செலவுத்திட்டத்துக்கு முந்தைய ஓர் அறிக்கையை வெளியிட வேண்டும் எனக் கூறுகிறது.

**6. "கோவில்பட்டி கடலை மிட்டாய்"க்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது. கோவில்பட்டி அமைந்துள்ள மாவட்டம் எது?**

அ. திருநெல்வேலி

**ஆ. தூத்துக்குடி ☑**

இ. தென்காசி

ஈ. இராமநாதபுரம்



❖ தூத்துக்குடி மாவட்டம், "கோவில்பட்டி கடலை மிட்டாய்"க்கு புவிசார் குறியீடு (GI) வழங்கப்பட்டுள்ளது. புவிசார் குறியீடுகளின் துணைப் பதிவாளர் இதனை அறிவித்தார். கோவில்பட்டி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வெல்லப்பாகுடன் வேர்க்கடலையைச்சேர்த்து, "கடலை மிட்டாய்" தயாரிக்கப்படுகிறது. நீண்டகாலம் கெடாமலிருக்கும் ஆற்றல் பெற்றுள்ளதால், இதனை பேரளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். மேலும், புவிசார் குறியீடு பெற்றுள்ளதால் இந்த இனிப்புவகை, தேசிய அளவிலும் பன்னாட்டளவிலும் வாடிக்கையாளர்களை பேரளவில் ஈர்க்கும்.

**7. "வங்கித்திட்டங்கள், எண்ணங்கள், புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சி வலைதளம்" என்றவொன்ற தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ. சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம்

**ஆ. MSME அமைச்சகம் ☑**

இ. மனிதவள மேம்பாட்டு அமைச்சகம்

ஈ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

MSME
सूक्ष्म , लघु एवं मध्यम उद्यम
MICRO, SMALL & MEDIUM ENTERPRISES

❖ மத்திய சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலை, சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் அமைச்சரான நிதின் கட்கரி, காணொளிமூலம் "வங்கித்திட்டங்கள், யோசனைகள், புத்தாக்கம் & ஆராய்ச்சி வலைதளத்தை" தொடங்கிவைத்தார். இவ்வலைதளம்மூலம் மத்திய, மாநில, யூனியன் பிரதேச அரசுகளின் அனைத்துத் திட்டங்களையும் அணுகவியலும்.

❖ இந்தத் துறையின் யோசனைகள், புதிய எண்ணங்கள் மற்றும் ஆராய்ச்சிகளைப்பதிவேற்ற இதில் இடமுள்ளது. யோசனைகளைத் தெரிவிப்பதற்கு மட்டுமல்லாமல், அதனை மதிப்பிட்டு தரக்குறியீடு வழங்கக்கூடிய தனித்துவமான அம்சங்கள் இத்தளத்தில் உள்ளன. கூட்டு முதலீடு, அந்நிய பங்குதாரர் –களையும் இந்த வலைதளம் ஊக்குவிக்கும்.

**8.பொதுத்துறை நிறுவனங்கள் தேர்வுவாரியத்தின் அடுத்த தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

அ. அமிதாப் காந்த்

**ஆ. இராஜீவ் குமார் ☑**

இ. M S சாஹூ

ஈ. நிருபேந்திர மிஸ்ரா



❖ முன்னாள் நிதித்துறை செயலாளர் இராஜீவ் குமார், அண்மையில், பொதுத்துறை நிறுவனங்கள் தேர்வு வாரியத்தின் தலைவராக 3 ஆண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்டார். இவருக்கு முன்னர் இப்பதவியில் இருந்த, அண்மையில் குடியரசுத்தலைவர் இராம் நாத் கோவிந்தின் செயலாளராக நியமிக்கப்பட்ட கபில் தேவ் திரிபாதிக்கு பதிலாக இராஜீவ் குமார் நியமிக்கப்பட்டுள்ளார். பொதுத்துறை நிறுவனங்கள் தேர்வு வாரியம் என்பது மத்திய அரசுத்துறை நிறுவனங்களில் உயர் நிர்வாகப் பதவிகளை நியமிப்பது குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதற்காக பணியாளர், பொதுமக்கள் குறைதீர் மற்றும் ஓய்வூதிய அமைச்சகத்தின்கீழ் இந்திய அரசால் அமைக்கப்பட்ட உயரதிகாரம் பெற்ற ஓர் அமைப்பாகும்.

**9.ஆந்திர மாநில அரசு தொடங்கியுள்ள, "ஜகனண்ணா வித்யா தீவேனா" திட்டத்தின் நோக்கம் என்ன?**

**அ. கல்லூரிக் கட்டணத்தை 100% திருப்பியளித்தல் ☑**

ஆ. பள்ளிகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்

இ. சிறுமிகளுக்கு இலவச கல்வி

ஈ. பள்ளிகளில் மதிய உணவு



❖ பொறியியல் உட்பட உயர்கல்வி பயிலும் மாணவர்களின் கல்விக்கட்டணங்கள் 100% திருப்பியளிக்கும் "ஜகனண்ணா வித்யா தீவேனா" என்னும் திட்டத்தை ஆந்திரப் பிரதேச மாநில அரசு அறிவித்துள்ளது. இதற்காக ₹4,000 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. முந்தைய அரசு செயல்பட்ட காலத்தில் மிச்சமிருந்த தொகையை வழங்குவதற்காக ₹1,880 கோடி நிதியும் விடுவிக்கப்பட்டுள்ளது. இந்தத்திட்டத்தின்மூலம், அம்மாநிலத்தைச் சார்ந்த பதினொன்கு லட்சம் கல்லூரி மாணாக்கர் பயனுறுவர். திருப்பிச்செலுத்தப்படும் தொகையானது இக்கல்வியாண்டிலிருந்து 4 தவணைகளில், மாணாக்கரின் தாய்மார்களின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வரவுவைக்கப்படும்.

**10.ஜான்–ஜார்ஜ் நூவர் என்பவர் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதத்தில் கொண்டாடப்படும் எந்தச் சிறப்பு நாளுடன் தொடர்புடையவராவார்?**

அ. உலக நலவாழ்வு நாள்

ஆ. உலக படைப்பாற்றல் மற்றும் புத்தாக்க நாள்

**இ. உலக நடன நாள் ☑**

ஈ. உலக நூல் மற்றும் பதிப்புரிமை நாள்



- நடனக்கலைஞர்களின் சேவையை கௌரவிக்கும் பொருட்டு UNESCO, சர்வதேச நடன கவுன்சிலுடன் இணைந்து உலக நடன நாளை ஏப்.29ஆம் தேதி கொண்டாடி வருகிறது. இது, நடனக்கலைஞர் ஜான் ஜார்ஜ் நூவர் (Jean–Georges Noverre) என்பவரின் பிறந்தநாளாகும்.

- பிரெஞ்சு நடனக்கலைஞரான இவர் பாலே நடனக்கலையில் சிறந்து விளங்கியவர். மக்களிடையே நடனத்தின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கச்செய்வதுடன் ஒவ்வொரு நாடுகளிலும் உள்ள நடனத்திற்குரிய முக்கியத்துவத்தை அறிந்துகொள்வதற்கும் இந்நாள் கொண்டாடப்படுகிறது. இந்தச் சிறப்பு நாளை பன்னாட்டு நாடக நிறுவனத்தின் நடனக்குழுமம் உருவாக்கியுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் ஒரு சிறந்த நடனக்கலைஞரை இக்குழுமம் தேர்ந்து, அவரின் செய்தியை இவ்வுலகுக்கு கூறுகிறது. இந்த ஆண்டுக்கான கருத்தை, தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த நடனக் கலைஞரான கிரிகோரி வுயானி மாகோமா வழங்கியுள்ளார்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப தொடர்பு கவுன்சில் தொடங்கிய COVID-19 நோய்த்தொற்றை மையமாகக்கொண்ட உடல்நலம் மற்றும் இடர் தொடர்பு குறித்த திட்டத்தின் பெயர் என்ன?**

Department of Science & Technology, Government of India

அ. யாத்ரா

**ஆ. யாஷ் ☑**

இ. யக்னா

ஈ. வருண்

❖ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின்கீழ் செயல்படும் தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப தொடர்பு கவுன்சிலானது உடல்நலம் மற்றும் இடர் தொடர்பு குறித்த ஒரு திட்டத்தை, 'Year of Awareness on Science and Health' என்ற பெயரில் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டம், உடல்நலம் குறித்த நடவடிக்கைகளை ஊக்குவிப்பதும், மக்களிடையே அறிவியல் மனநிலையையும் நலவாழ்வு நனவையும் ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. COVID-19 நோய்த்தொற்றைச் சமாளிக்க சமுதாயத்தை சித்தப்படுத்துவதற்கான தீர்வுகளை வளர்ப்பதில் கல்வி, ஆராய்ச்சி, ஊடகங்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகளை ஈடுபடுத்தவும் இந்தத் திட்டம் திட்டமிட்டுள்ளது.

**2.சமீபத்தில் அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட, "திட்ட கண்காணிப்புப் பிரிவு" என்பது எந்தத் தொழிலுடன் தொடர்புடையது?**



அ. வேதியியல் தொழிற்துறை

ஆ. உணவு பதப்படுத்தும் தொழிற்துறை

**இ. நிலக்கரி தொழிற்துறை ☑**

ஈ. தானியங்கு தொழிற்துறை

❖ நிலக்கரி சுரங்கங்களில் பணிகளை தொடங்குவதற்கு மத்திய & மாநில அரசு அதிகாரிகளிடமிருந்து தேவையான பல்வேறு அனுமதிகளைப்பெற, நடுவணரசு, அண்மையில், "திட்ட கண்காணிப்புப் பிரிவு" என்றவொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த முடிவு, நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு பெற்றோருக்கு அவர்களது சுரங்கப்பணிகளை சரியான நேரத்தில் தொடங்குவதற்கான ஒப்புதல்களைப்பெற உதவும். இதன்மூலம், இந்தியாவில் வணிகம் மேற்கொள்வது எளிமையாக்கப்படும். இது, நாட்டில் நிலக்கரி உற்பத்தியை மேம்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

**3.இந்திய ரிசர்வ் வங்கி, அண்மையில் தனது SLF-MF திட்டத்தின்கீழான பயன்களை நீட்டித்தது. இந்தத் திட்டத்தில் 'MF' என்பது எதைக்குறிக்கிறது?**




அ. Micro Finance

**ஆ. Mutual Funds ☑**

இ. Micro Funds

ஈ. Multiple Finance

- ❖ பரஸ்பர நிதியங்கள் மீதான பணப்புழக்கத்தை அதிகரிப்பதற்காக இந்திய ரிசர்வ் வங்கி ₹50,000 கோடி கடனுதவியை அறிவித்துள்ளது. பிரபல நிறுவனமான பிராங்க்ளின் டெம்பிள்டன், கடந்த மார்ச் மாத இறுதியில், கிட்டத்தட்ட 50% வரை வீழ்ச்சிகண்டது. தொடர் சரிவை அடுத்து, இந்நிறுவனம் தனது 6 கடன் திட்டங்களை நிறுத்துவதாக அறிவித்தது.

- ❖ இதையடுத்து, பொருளாதார வல்லுநர்களின் கோரிக்கைக்கு ஏற்ப, இந்திய ரிசர்வ் வங்கி பரஸ்பர நிதி நிறுவனங்களின் பணப்புழக்கத்தை அதிகரிப்பதற்காக ₹50,000 கோடி கடனுதவி அளிக்கும், "Special Liquidity Facility for Mutual Funds (SLF–MF) திட்டத்தை அறிவித்துள்ளது. பரஸ்பர நிதி நிறுவனங்கள் தொடர்ந்து செயல்படுவதற்கு இந்த நிதி பெரிதும் உதவும் என்று கூறப்படுகிறது.

**4.எந்த நாடு, தனது "Partnership for Affordable Healthcare Access and Longevity (PAHAL)" திட்டத்தின் மூலம், இந்தியாவுக்கு $3 மில்லியன் டாலர் நிதியுதவி வழங்குவதாக அறிவித்துள்ளது?**

அ. ஐக்கிய பேரரசு

**ஆ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

இ. ஜெர்மனி

ஈ. ஜப்பான்



- ❖ 'Partnership for Affordable Healthcare Access and Longevity (PAHAL)' என்பது அமெரிக்காவின் USAID மற்றும் புது தில்லியைச் சார்ந்த IPE குளோபல் நிறுவனத்திற்கும் இடையிலான ஒரு கூட்டு திட்டமாகும். COVID–19 நோய்த்தொற்றின் பரவலைக் கையாள்வதற்காக ஏற்கனவே $5.9 மில்லியன் அமெரிக்க டாலர்களை அமெரிக்கா இந்தியாவுக்கு வழங்கியுள்ளது. தற்போது அதனோடு சேர்த்து $3 மில்லியன் டாலர் நிதியுதவியை கூடுதலாக வழங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. PAHAL திட்டத்தின்மூலம், பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய திட்டத்தின்கீழ்வரும் ஏழைகளுக்கும் மருத்துவ உதவி கிடைக்கும்.

**5. 1960 மே 1 முதல் நடைமுறைக்குவந்த மும்பை மறுசீரமைப்புச் சட்டத்தின் விளைவாக மகாராஷ்டிர மாநிலத்துடன் இணைந்து உருவாக்கப்பட்ட மற்றொரு மாநிலம் எது?**

அ. மத்திய பிரதேசம்

**ஆ. குஜராத் ☑**

இ. கர்நாடகா

ஈ. கோவா



- ❖ 1960ஆம் ஆண்டு மே 1 முதல் நடைமுறைக்குவந்த மும்பை மறுசீரமைப்புச் சட்டம், அப்போதைய பம்பாய் மாகாணத்தை மொழியின் அடிப்படையில் மகாராஷ்டிரா மற்றும் குஜராத் என இரண்டு தனித்தனி மாநிலங்களாகப் பிரித்தது. மராத்தி மற்றும் கொங்கனி பேசும் மக்கள் மகாராஷ்டிராவின் ஒருபகுதியாக மாறினர், அதேவேளையில் குஜராத்தி மற்றும் கச்சி மொழி பேசுபவர்கள் குஜராத்தின் ஒருபகுதியாக மாறினர். ஆகையால், ஒவ்வோர் ஆண்டும் மகாராஷ்டிரா மற்றும் குஜராத்தின் மாநிலம் உருவான நாளாக மே 1 கொண்டாடப்படுகிறது.

**6.அதானு சக்ரவர்த்தியின் பணிமூப்பு ஓய்வை அடுத்து, அடுத்த பொருளாதார விவகாரச் செயலாளராக அண்மையில் பொறுப்பேற்றுக்கொண்டவர் யார்?**

அ. இராஜேஷ் வர்மா

**ஆ. தருண் பஜாஜ் ☑**

இ. பிரீத்தி சுதன்

ஈ. அரவிந்த்குமார் சர்மா



❖ பொருளாதார விவகாரங்கள் துறைச்செயலராக இருந்த அதானு சக்ரவர்த்தி ஏப்ரல் 30ஆம் தேதியுடன் ஓய்வுபெற்றதை அடுத்து, புதிய செயலராக தருண் பஜாஜ் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார். 1988ஆம் ஆண்டு இ.ஆ.ப பிரிவைச்சேர்ந்த தருண் பஜாஜ், இதற்கு முன்பு கடந்த 2015ஆம் ஆண்டிலிருந்து பிரதமர் அலுவலகத்தில் கூடுதல் செயலராகப் பணியாற்றினார். அதற்குமுன் நிதியமைச்சகத்தின்கீழ் இயங்கும் பொருளாதார விவகாரங்கள் துறையின் இணைச்செயலராக பணியாற்றினார். தவிர, நிதிச்சேவைகள் துறையில் இணைச்செயலர், இயக்குநர் ஆகிய பதவிகளையும் அவர் வகித்துள்ளார்.

**7.இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் நடத்திய ஓர் அண்மைய ஆய்வின்படி, 2020 ஏப்ரலில் அதிக வேலையின்மை விகிதத்தை பதிவுசெய்த மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. கேரளா

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. பீகார்



❖ இந்திய பொருளாதார கண்காணிக்கும் மையம் நடத்திய ஓர் அண்மைய ஆய்வின்படி, இந்தியாவின் வேலையின்மை விகிதம் 14.8 சதவீத புள்ளிகள் அதிகரித்து 2020 ஏப்ரல் மாதத்தில் 23.5 சதவீதமாக உயர்ந்துள்ளது. மிகப்பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு, 49.8 சதவீதத்துடன் நடப்பாண்டு ஏப்ரலில் அதிக வேலையின்மை விகிதத்தை பதிவுசெய்துள்ளது. இந்த விகிதம், நடப்பாண்டு மார்ச்சில் 6.3 சதவீதமாக இருந்தது. தமிழ்நாட்டை அடுத்து ஜார்கண்ட் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்கள் உள்ளன. அதேவேளை, பஞ்சாப், சத்தீஸ்கர் மற்றும் தெலுங்கானாவில் இந்த விகிதம் மிகக்குறைந்த அளவே காணப்படுகிறது.

**8.பொது முடக்கத்தின்போது, இரயில்வே அமைச்சினால் இயக்கப்படும் சிறப்பு ஷ்ராமிக் இரயில்கள்மூலம், புலம்பெயர்ந்த தொழிலாளர்களை அழைத்துவந்த முதல் மாநிலம் எது?**

**அ. ஜார்க்கண்ட் ☑**

ஆ. கேரளா

இ. உத்தரபிரதேசம்

ஈ. இராஜஸ்தான்



❖ நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் சிக்கித்தவிக்கும் தொழிலாளர்கள் மற்றும் மாணவர்களை அவர்களது சொந்த மாநிலங்களுக்கு அழைத்துவருவதற்காக இந்திய இரயில்வே, "சிறப்பு ஷ்ராமிக் இரயில்"களை அறிமுகப்படுத்தியுள்ளது. தெலுங்கானாவிலிருந்து இராஞ்சிக்கு புறப்பட்ட முதல் ஷ்ராமிக்

இரயில்மூலம், புலம்பெயர்ந்த தொழிலாளர்களை அவர்களது சொந்த மாநிலங்களுக்கு அழைத்துவந்த முதல் மாநிலமாக ஜார்க்கண்ட் திகழ்கிறது. சமீபத்தில், கேரள மாநிலத்திலிருந்து 1,200 புலம்பெயர்ந்த தொழிலாளர்களை ஏற்றிக்கொண்டு மற்றொரு சிறப்பு இரயில் ஒடிசாவின் புவனேசுவருக்கு புறப்பட்டது.

**9. COVID–19 பெரும் பரவலுக்கு இடையே, எந்த மாநில / யூனியன் பிரதேசத்தின் சட்டமன்ற மேலவைத் தேர்தல்களை நடத்துவதற்கு இந்திய தேர்தல் ஆணையம் அனுமதி அளித்துள்ளது?**

அ. ஜார்க்கண்ட்

**ஆ. மகாராஷ்டிரா ☑**

இ. மத்திய பிரதேசம்

ஈ. ஜம்மு & காஷ்மீர்

❖ மகாராஷ்டிராவில் உள்ள சட்டமன்ற மேலவைக்கான தேர்தல்களை நடத்துவதற்கு இந்திய தேர்தல் ஆணையம் சமீபத்தில் அனுமதி வழங்கியது. முதலமைச்சர் உத்தவ் தாக்கரே மாநில சட்டமன்றத்தின் ஈரவைகளிலும் உறுப்பினராக இல்லை. ஆயினும் அவர், மே 27ஆம் தேதிக்கு முன்னதாக ஏதேனும் ஒரு அவைக்கு தேர்ந்தெடுக்கப்படவேண்டும். காலக்கெடுவான மே 27'க்கு முன்னதாக தேர்தல்களை நடத்த இந்திய தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது. இந்த ஒன்பது இடங்களுக்கான தேர்தல் செயல்முறை, COVID–19 தொற்றுநோயைக் கருத்தில் கொண்டு நிறுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

**10. மணிப்பூரைச் சார்ந்த தங்ஜம் தபாலி சிங் என்பவருக்கு, 'Order of Rising Sun' வழங்கப்பட்டுள்ளது. இந்த விருதை நிறுவிய நாடு எது?**



அ. ஐக்கிய இராச்சியம்

**ஆ. ஜப்பான் ☑**

இ. சவூதி அரேபியா

ஈ. ஜெர்மனி

❖ மணிப்பூரைச் சார்ந்த மருத்துவரும், மணிப்பூர் சுற்றுலா மன்றத்தின் நிறுவனருமான தங்ஜம் தபாலி சிங்குக்கு, ஜப்பான், 'Order of Rising Sun – Gold and Silver Rays' விருதை வழங்கியுள்ளது. இந்தியாவில் ஜப்பானைப்பற்றி நன்கு புரிந்துகொள்ள உதவியதற்கும், இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை ஆழப்படுத்தியதற்குமாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த விருதை ஜப்பானிய பேரரசர் மீஜி 1875'இல் நிறுவினார். ஜப்பானிய கலாசாரம், சூழல் பாதுகாப்பு மற்றும் பன்னாட்டு உறவுகளை மேம்படுத்துவதில் பங்களிக்கும் தனிநபர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.உழவர்களை விநியோகச் சங்கிலியுடன் இணைப்பதற்காக அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி கழகம் (CSIR) தொடங்கியுள்ள திறன்பேசி செயலியின் பெயர் என்ன?**

அ. கிசான் ரத்

**ஆ. கிசான் சபா ☑**

இ. கிசான் சுரக்ஷா

ஈ. கிசன் சம்ரிதி

❖ புது தில்லியில் உள்ள அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி கழகத்தின் (CSIR) மத்திய சாலை ஆராய்ச்சி நிறுவனம், 'கிசான் சபா' செயலியை உருவாக்கியுள்ளது. விநியோகச் சங்கிலி மற்றும் சரக்குப் போக்குவரத்து மேலாண்மை முறையுடன் விவசாயிகளை இணைப்பதற்கு இந்தச்செயலி உதவுகிறது. உழவர்கள், போக்குவரத்து நிறுவனங்கள், சேவை வழங்குவோர் பூச்சி மருந்துகள், விற்பனையாளர், பதனக்கிடங்கு மற்றும் சேமிப்புக்கிடங்கு உரிமையாளர்கள், மண்டி விற்பனையாளர்கள், நுகர்வோர் பெரிய சில்லறை விற்பனை கடைகள், மின்னணு வணிக அங்காடிகள், நிறுவன வாங்குவோர் மற்றும் சம்பந்தப்பட்ட இதர நிறுவனங்களை இந்தச் செயலி இணைக்கிறது.

**2. 2020 மே மாத நிலவரப்படி, எத்தனை மாநிலங்கள், "ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை' திட்டத்தில் இணைந்துள்ளன?**

அ. 5

ஆ. 8

இ. 10

**ஈ. 17 ☑**

17

❖ "ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை" என்ற திட்டத்தில் உத்தர பிரதேசம், பீகார், பஞ்சாப், ஹிமாச்சலப பிரதேசம், தாத்ரா நகர் ஹவேலி மற்றும் டாமன், டையூ என மேலும் ஐந்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் சேருவதற்கு மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் இராம்விலாஸ் பஸ்வான் ஒப்புதல் அளித்துள்ளார்.

❖ இந்தத்திட்டத்தில் சேருவதற்கு ஆந்திர பிரதேசம், கோவா, குஜராத், ஹரியானா, ஜார்க்கண்ட், கேரளா, கர்நாடகா, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, இராஜஸ்தான், தெலங்கானா, திரிபுரா ஆகிய பன்னிரண்டு மாநிலங்கள் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளன. தேசிய அளவில் / மாநிலங்களுக்கு இடையில் குடும்ப அட்டைகளைப் பயன்படுத்திக்கொள்ளும் திட்டத்தில், 17 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 60 கோடி தேசிய உணவுப்பாதுகாப்புத் திட்டப்பயனாளிகளுக்கு உதவிகரமாக இருக்கும். தற்போது பயன்படுத்தும் குடும்ப அட்டையின்மூலம் இந்த 17 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் வழங்கப்படும் உணவு தானியங்களை எந்த நியாயவிலைக்கடையிலும் அவர்களால் வாங்கவியலும்.

**3. 'பாரத் சந்தை' என்னும் தேசிய மின்னணு வணிகச்சந்தையை தொடங்கவுள்ள இந்திய கூட்டமைப்பு எது?**

அ. இந்திய தொழில்துறை கூட்டமைப்பு (CII)

**ஆ. அகில இந்திய வர்த்தகர்கள் கூட்டமைப்பு (CAIT) ☑**

இ. இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை சங்கங்கள் கூட்டமைப்பு (FICCI)

ஈ. தேசிய மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்கள் சங்கம் (NASSCOM)



❖ அகில இந்திய வர்த்தகர்கள் கூட்டமைப்பானது (CAIT) சமீபத்தில், 'BharatMarket' என்னும் ஒரு தேசிய மின்னணு வணிகச்சந்தையை தொடங்கப்போவதாக அறிவித்தது. உற்பத்தியாளர்களிடம் தொடங்கி கடைநிலை நுகர்வோர் வரை போக்குவரத்து வசதி மற்றும் விநியோகச் சங்கிலிகளில் சேவைகளை வழங்கப்பெறும் தொழில்நுட்ப பங்காளிகளுடன் இணைந்து, அனைத்து சில்லறை வர்த்தகர்களையும் சந்தையுடன் இணைப்பதை இந்தத் தளம் நோக்கமாகக்கொண்டுள்ளது.

**4.தொழில்மயமாக்கல் சகாப்தத்தின்போது, தொழிலதிபர்களின் உழைப்புச்சுரண்டலுக்கு எதிராக கிளர்ச்சி செய்தோர் எந்நாட்டினர்?**

அ. ஐக்கிய பேரரசு

**ஆ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

இ. ஜெர்மனி

ஈ. ஜப்பான்




❖ தொழில்மயமாக்கல் சகாப்தத்தின்போது, ஐக்கிய அமெரிக்க நாடுகளின் தொழிலாளர்கள், உழைப்புச் சுரண்டலை மேற்கொண்ட முதலாளி வர்க்கத்தினருக்கு எதிராக ஒன்றாக கிளர்ந்தெழுந்தனர். நியாயமான ஊதியம், வேலைக்கு இடையே இடைவேளை மற்றும் ஊதியத்துடன் கூடிய விடுப்பு ஆகிவற்றை அவர்கள் கோரினர். 1886 மே 1 அன்று நடந்த இக்கிளர்ச்சி, மே தின கொண்டாட்டத்திற்கு வழிவகுத்தது. பன்னாட்டு தொழிலாளர் நாள் என்றும் அழைக்கப்படும் மே தினம் மே 1 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந்தியாவில், முதல் மே தினம், 1923 மே 1 அன்று சென்னையில் உள்ள ஹிந்துஸ்தானின் தொழிலாளர் கிசான் கட்சியால் கொண்டாடப்பட்டது.

**5.இலையுதிர்காலம் மற்றும் வசந்த காலத்தில் என ஆண்டுக்கு இருமுறை கொண்டாடப்படுகிற எந்தச் சிறப்பு நாள், மே 2 அன்று கொண்டாடப்படுகிறது?**

அ. பன்னாட்டு விண்வெளி விழிப்புணர்வு நாள்

**ஆ. பன்னாட்டு வானியல் நாள் ☑**

இ. பன்னாட்டு புவி நாள்

ஈ. பன்னாட்டு இயற்கை நாள்



❖ பன்னாட்டு வானியல் நாளானது ஆண்டுக்கு இரண்டு முறை, இலையுதிர் மற்றும் வசந்த காலத்தில் கொண்டாடப்படுகிறது. நடப்பாண்டு வானியல் நாள், மே 2 & செப்.26 அன்று கொண்டாடப்படுகிறது.

- ❖ வடக்கு கலிபோர்னியா வானியல் சங்கத்தின் தலைவர், கடந்த 1973ஆம் ஆண்டில் முதல் வானியல் நாள் கொண்டாட்டத்தை ஏற்பாடுசெய்திருந்தார். பேரண்டம் குறித்தும் வானியல் துறையைப்பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளைக்கொண்டாடுவதன் நோக்கமாகும்.

**6. "Prof. B. B. Lal–India Rediscovered" நூலின் நூற்றாண்டு பதிப்பு, மின்னூல் வடிவில் வெளியிடப்பட்டது. பேராசிரியர் B.B. லால் தொடர்புடைய துறை எது?**



அ. தொற்றுநோயியல்

**ஆ. தொல்லியல் ☑**

இ. அறிவியல் ஆராய்ச்சி

ஈ. இலக்கியம்

- ❖ மாபெரும் தொல்லியல் ஆய்வாளர் பேராசிரியர் B.B லால் அவர்களின் நூற்றாண்டையொட்டி, "Prof. B. B. Lal–India Rediscovered" என்ற தலைப்பிலான மின்னூலை புது தில்லியில் மத்திய கலாசாரத்துறை அமைச்சர் பிரகலாத் சிங் படேல் வெளியிட்டார். இந்தப் புத்தகத்தை பேராசிரியர் B. B லால் நூற்றாண்டுக் கொண்டாட்டத்துக்கான ஏற்பாட்டுக் குழுவுடன் இணைந்து நூற்றாண்டு சிறப்புப் பதிப்பாக மத்திய கலாசாரத்துறை அமைச்சகம் தயாரித்துள்ளது. தொல்லியல் துறைக்கு அவராற்றிய ஈடிணையற்ற பங்களிப்புக்காக கலாசாரத்துறை அளிக்கும் அஞ்சலியாக இந்நூல் அமைந்துள்ளது.

**7. COVID–19 நோய்த்தொற்றுக்கு மத்தியில் நடந்த அவசரநிலை மெய்நிகர் G20 டிஜிட்டல் பொருளாதார அமைச்சர்கள் கூட்டத்தில் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தியவர் யார்?**



அ. பியூஷ் கோயல்

ஆ. நிர்மலா சீதாராமன்

**இ. இரவிசங்கர் பிரசாத் ☑**

ஈ. பிரகாஷ் ஜவடேகர்

- ❖ COVID–19 பெருந்தொற்று ஏற்படுத்தியுள்ள சவால்கள் குறித்து விவாதிப்பதற்காகவும் டிஜிட்டல் தொழில் நுட்பங்களை பயன்படுத்தி பன்னாட்டளவில் ஒருங்கிணைந்த முயற்சிகள் எடுப்பது குறித்து ஆலோசிப்பதற்காகவும் அவசரநிலை மெய்நிகர் G20 டிஜிட்டல் பொருளாதார அமைச்சகர்களின் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் இந்தியாவின் பிரதிநிதியாக மத்திய சட்டம் மற்றும் நீதி, தொடர்பியல் மற்றும் மின்னணுவியல், தகவல் தொழில்நுட்ப அமைச்சர் இரவிசங்கர் பிரசாத் கலந்துகொண்டார்.

- ❖ இந்தக்கூட்டத்தில், G20 டிஜிட்டல் அமைச்சர்கள் கொரோனா பெருந்தொற்றை கட்டுப்பாட்டில் கொண்டு வரவும் மக்களை பாதுகாக்கவும் டிஜிட்டல் மீடியத்தின் ஆற்றலை பெருமளவில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை ஒப்புக்கொண்டனர். G20 டிஜிட்டல் பொருளாதார பணிக்குழு COVID–19'இன் அமைச்சர்கள் மாநாட்டு அறிக்கையானது கொரோனா பெருந்தொற்றை எதிர்த்துப் போராடுவதற்கான ஒருங்கிணைந்த பன்னாட்டு டிஜிட்டல் முயற்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

**8. NASA'இன் செவ்வாய் உலங்குவானூர்தியின் புதிய அதிகாரப்பூர்வ பெயர் என்ன?**



அ. Intelligence

**ஆ. Ingenuity ☑**

இ. Brilliance

ஈ. Endeavor

❖ NASA'ஆல் நடத்தப்பட்ட, 'Name the Rover' கட்டுரைப் போட்டியில், அலபாமா உயர்நிலைப் பள்ளியைச் சார்ந்த ஒரு இளைஞியின் கட்டுரை தேர்வுசெய்யப்பட்டுள்ளது, இது, செவ்வாய் கோளில் பறக்கவுள்ள NASA'இன் உலங்குவானூர்திக்கு பெயராக தெரிவுசெய்யப்பட்டுள்ளது. NASA அறிவித்தபடி, செவ்வாய் கோளில் பறக்கவுள்ள NASA'இன் உலங்குவானூர்திக்கான புதிய அதிகாரப்பூர்வ பெயர், 'Ingenuity'. முன்னதாக மார்ச்சில், ஊர்திக்கு, 'Preseverance' எனப் பெயரிடப்பட்டிருந்தது. இந்த உலங்குவானூர்தி, ஜூலை அல்லது ஆகஸ்டில் ஏவப்படும் 'Preseverance' ரோவர்மூலம் செவ்வாய் கோளுக்குச் செல்லும்.

**9.ஆயுஷ் அமைச்சகத்தின் கீழுள்ள அகில இந்திய ஆயுர்வேத நிறுவனம் (AIIA), எந்த மாநில / யூனியன் பிரதேசத்தின் காவல்துறையுடன் இணைந்து, 'ஆயுரக்ஷா' என்ற திட்டத்தை ஏற்பாடு செய்தது?**

அ. ஜார்க்கண்ட்

**ஆ. புது தில்லி ☑**

இ. மத்திய பிரதேசம்

ஈ. ஜம்மு & காஷ்மீர்

❖ மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் அகில இந்திய ஆயுர்வேத மருத்துவ நிறுவனமும் தில்லி காவல்துறையும் இணைந்து தில்லியில், "ஆயுரக்ஷா" என்ற நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தன. COVID–19 தொற்று ஒழிப்பில் களத்தில் உள்ள தில்லி காவல்துறையினரின் பணிகளைப் பாராட்டும் வகையிலான இந்நிகழ்வில், "கொரோனா சே ஜங் தில்லி போலீஸ் கே சாங்" (கொரோனா நோய்த்தொற்றை எதிர்த்து போரிடுவோம், தில்லி காவல்துறையுடன் பாடுவோம்) என்ற விழிப்புணர்வு பரப்புரை நடத்தப்பட்டது. நீரிழிவு நோய், மனவழுத்தம், உயர் குருதி அழுத்தம் போன்ற நோயுற்ற நிலைமைகளைக்கொண்ட காவல்துறை அதிகாரிகள் AIIA'ஆல் அடையாளம் காணப்படுவார்கள்.

**10. "ஆறுகள் மேலாண்மையின் எதிர்காலம்" குறித்த 'IDEAthon'ஐ தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ. உள்துறை அமைச்சகம்

ஆ. வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகம்

இ. பழங்குடியினர் விவகார அமைச்சகம்

**ஈ. ஜல் சக்தி அமைச்சகம் ☑**

❖ COVID–19 தொற்று நெருக்கடி ஆறுகள் மேலாண்மைக்கான வருங்கால திட்டங்களை எவ்வாறு வடிவமைக்கும் என்பதைப்பற்றி தெரிந்துகொள்ள, "ஆறுகள் மேலாண்மையின் எதிர்காலம்" குறித்த

'IDEAthon' என்னும் ஆலோசனைகளை சொல்லும் போட்டியை, நீர்வள அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தூய்மை கங்கைக்கான தேசிய இயக்கமும் தேசிய நகர்ப்புற விவகாரங்கள் நிறுவனமும் இணைந்து நடத்தின.

- இந்தப் பன்னாட்டு இணைய கருத்தரங்கில் கிட்டத்தட்ட ஐந்நூறு பேர் பங்கேற்றனர். பல்வேறு நாடுகள் & பன்னாட்டு அமைப்புகளை சேர்ந்தோர் நிபுணர் குழுவில் இருந்தனர். ஆறுகள் மேலாண்மையைப் பற்றிய கூடுதல் கவனத்தை ஈர்க்கவும், நகரங்களையும் ஆறுகளையும் ஒன்றோடொன்று இணைப்ப –தைப்பற்றி வலியுறுத்தவும் இந்த, 'IDEAthon'ஐ தூய்மை கங்கைக்கான தேசிய இயக்கம் நடத்தியது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.காஷ்மீர் குங்குமப்பூவுக்கு புவிசார் குறியீடு கிடைக்கப்பெற்றுள்ளது. உலகில் அதிகளவில் குங்குமப் பூவை உற்பத்தி செய்யும் நாடு எது?**



அ. இந்தியா

**ஆ. ஈரான் ☑**

இ. சவுதி அரேபியா

ஈ. தைவான்

❖ குங்குமப்பூ உற்பத்தியைப்பொறுத்தவரை ஈரான் உலகில் முதலிடத்தில் உள்ளது. காஷ்மீர் குங்குமப் பூவுக்கு அண்மையில் புவிசார் குறியீடு கிடைக்கப்பெற்றது. இது, ஜம்மு–காஷ்மீரின் கரேவா (உயர் நிலங்களில்) பயிரிடப்பட்டு அறுவடை செய்யப்படுகிறது. நீண்ட மற்றும் அடர்த்தியான சூல்முடிகள், இயற்கையான அடர் செந்நிறம் மற்றும் அதிகளவு குரோசின், சஃப்ரானல் மற்றும் பைக்ரோக்ரோசின் போன்றவை காஷ்மீர் குங்குமப்பூவின் தனித்துவமான பண்புகளாகும். கடல் மட்டத்திலிருந்து சராசரி 1,600 மீ முதல் 1,800 மீ உயரத்தில் வளர்க்கப்படும் உலகின் ஒரே குங்குமப்பூ வகை இதுவாகும்.

**2. 'உலக டூனா நாள்' 2020 மே 3 அன்று அனுசரிக்கப்பட்டது. டூனா சார்ந்த இனம் எது?**



அ. பறவை

**ஆ. மீன் ☑**

இ. பூச்சி

ஈ. ஊர்வனம்

❖ 'உலக டூனா நாள்' 2020 மே 3 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டது. டூனா, ஒமேகா–3 நிறைந்த ஒரு மீன் வகையைச் சார்ந்த இனமாகும். இவ்வகை மீன்களில் தாதுக்கள், புரதங்கள் மற்றும் வைட்டமின் B12 உள்ளிட்ட அதிக ஊட்டச்சத்துகள் இருப்பதால், அதிகப்படியான நுகர்வின் காரணமாக இவ்வினம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகிறது. கடந்த 2016 டிசம்பரில், ஐ.நா பொது அவையானது மே 3ஆம் தேதியை அன்று உலக டூனா நாளாக அறிவித்தது.

**3. 'சக்–ஹாவ்' என்னும் ஒரு கருப்பரிசி வகைக்கு புவிசார் குறியீடு கிடைக்கப்பெற்றுள்ளது. இது, எந்த மாநிலத்தில் காணப்படுகிறது?**



அ. அஸ்ஸாம்

ஆ. சிக்கிம்

**இ. மணிப்பூர் ☑**

ஈ. அருணாச்சல பிரதேசம்

❖ மணிப்பூரைச் சார்ந்த 'சக்–ஹாவ்' என்னும் ஒருவகை கருப்பரிசிக்கு அண்மையில் புவிசார் குறியீடு கிடைக்கப்பெற்றது. 'சக்–ஹாவ்' என்பது நறுமணத்துடன் பசைத்தன்மை மிக்க ஒரு அரிசிவகையாகும். இது, மணிப்பூரில் அதிகளவில் பயிரிடப்படுகிறது.

- பாரம்பரிய மருத்துவர்களால் இது அதிகளவு பயன்படுத்தப்படுகிறது. அதன் நார்ச்சத்துமிக்க தவிட்டு அடுக்கு மற்றும் அதிக கச்சா நார்ச்சத்து ஆகியவற்றின் காரணமாக இதனைச் சமைப்பதற்கு மிக நீண்ட நேரமாகின்றது. மேலும், உத்தர பிரதேச மாநிலத்தின் நூற்றாண்டுகள் பழமையான கோரக்பூரின் டெர்ராகோட்டா பாரம்பரிய கலை வடிவத்துக்கும் புவிசார் குறியீடு கிடைக்கப்பெற்றுள்ளது.

**4.நகர்ப்புறவாசிகளுக்கு குறைந்தபட்சம் 120 நாட்களுக்கு வேலைவாய்ப்பு உறுதியளிப்பைத் தரும், 'முக்கிய மந்திரி ஷாஹரி ரோஜ்கர் உறுதியளிப்பு யோஜனா' என்பது எந்த மாநிலத்தின் திட்டமாகும்?**

அ. ஹரியானா

**ஆ. ஹிமாச்சல பிரதேசம் ☑**

இ. மத்திய பிரதேசம்

ஈ. சத்தீஸ்கர்

- ஹிமாச்சல பிரதேச அரசானது, நகர்ப்புறவாசிகளுக்கு குறைந்தபட்சம் 120 நாட்களுக்கு வேலைவாய்ப்பு உத்தரவாதம் அளிப்பதை நோக்கமாகக்கொண்ட, 'முக்கிய மந்திரி ஷாஹரி ரோஜ்கர் உறுதியளிப்பு யோஜனா' என்ற திட்டத்தை தொடங்க முடிவுசெய்துள்ளது. பணியமர்த்தப்படுவோருக்கு அவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான பயிற்சியும் வழங்கப்படும் என்றும் அம்மாநில அமைச்சரவை அறிவித்துள்ளது. பல்வேறு மாநிலங்களிலிருந்து ஆயிரத்துக்கும் மேலான தொழிலாளர்கள் தற்சமயம் ஹிமாச்சல பிரதேசத்திற்குத் திரும்பியுள்ளதால், அவர்களின் பணி அனுபவத்திற்கு ஏற்ப அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

**5.நடப்பாண்டு வழங்கப்படும் 25ஆவது நிக்கி ஆசியா பரிசுக்கு இந்திய பேராசிரியர் தலப்பில் பிரதீப் தேர்வு செய்யப்பட்டுள்ளார். நிக்கி ஆசியா பரிசினை, எந்த நாட்டைச் சார்ந்த ஓர் ஊடக நிறுவனம் உருவாக்கி வழங்கி வருகிறது?**

அ. தாய்லாந்து

ஆ. சிங்கப்பூர்

**இ. ஜப்பான் ☑**

ஈ. வியட்நாம்



- ஆசியாவில் நீடித்த வளர்ச்சிக்கு பங்களிக்கும் தனிநபர்களுக்கு நிக்கி ஆசிய பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த விருதை ஜப்பானின் மிகப்பெரிய ஊடக நிறுவனங்களுள் ஒன்றான நிக்கி உருவாக்கி வழங்கி வருகிறது. பிராந்திய வளர்ச்சி, அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புதுமை மற்றும் கலாசாரம் ஆகிய மூன்று பிரிவுகளில் இந்த விருது வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான விருது, மெட்ராஸ் ஐஐடி பேராசிரியரும், பத்மஸ்ரீ விருதாளருமான தலப்பில் பிரதீப் அவர்கட்கு இந்தியாவில் லிட்டருக்கு 2 பைசா செலவில் சுத்தமான தண்ணீரை வழங்கக்கூடிய நானோ தொழில்நுட்பத்தினாலான நீர் வடிப்பான்களை உருவாக்கியதற்காக வழங்கப்பட்டுள்ளது.

**6. மே.3 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படும் உலக பத்திரிகை சுதந்திர நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ. Journalism without borders

**ஆ. Journalism without Fear or Favour ☑**

இ. Press needs real Freedom

ஈ. Press Freedom without Pressure




❖ உலக பத்திரிகை சுதந்திர நாளானது (World Press Freedom Day) ஒவ்வோர் ஆண்டும் மே 3 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. "Journalism without Fear or Favour" என்ற ஓர் உலகளாவிய பரப்புரையை UNESCO யுனெஸ்கோ ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் தொடங்கியது. உலக பத்திரிகை சுதந்திர மாநாடானது கடந்த 1983ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ஏற்பாடு நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு, நெதர்லாந்து, இந்த மாநாட்டை அக்.18–20 வரை ஹேக்கில் நடத்தவுள்ளது. இம்மாநாடு, முன்னதாக, 2020 ஏப்ரலில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

**7.சமீபத்தில் காலமான லோக்பால் உறுப்பினரும் சத்தீஸ்கர் உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியுமானவரின் பெயர் என்ன?**

அ. K S நிசார் அகமது

ஆ. மேத்யூ அனிகுஷிகட்டில்

இ. குண்டனிகா கபாடியா

**ஈ. அஜய் குமார் திரிபாதி ☑**



❖ இந்திய லோக்பால் அமைப்பின் நீதித்துறை உறுப்பினர் நீதியரசர் அஜய்குமார் திரிபாதி (62) COVID–19 பாதிப்பால் புது தில்லி AIIMS மருத்துவமனையில் காலமானார். பாட்னா உயர்நீதிமன்றத்தில் வழக்குரைஞராகத் தொழில் தொடங்கிய அவர், கடந்த 2006'இல் பாட்னா உயர்நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதியாக நியமனம் பெற்றார். 2018'இல் சத்தீஸ்கர் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக அவர் பதவியேற்றார். கடந்த 2019'இல் இந்திய லோக்பால் அமைப்பின் நீதித்துறை உறுப்பினராக அவர் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

**8.நடப்பாண்டின் (2020) UNESCO / கில்லர்மோ கேனோ பரிசுக்கு ஜினெத் பெடோயா லிமா தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்த விருது தொடர்புடைய துறை எது?**

அ. கட்டடக்கலை

ஆ. கலாசாரம்

**இ. இதழியல் ☑**

ஈ. அறிவியல்




❖ ஆண்டுதோறும் வழங்கப்படும் UNESCO / கில்லர்மோ கேனோ உலக பத்திரிகை சுதந்திர பரிசானது பத்திரிகை சுதந்திரத்தை மேம்படுத்துவதற்கு பங்காற்றும் தனிநபர் / நிறுவனத்தை கௌரவிக்கிறது. கடந்த 1997ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த விருது, கொலம்பிய ஊடகவியலாளர் கில்லர்மோ கேனோ

இசாசாவின் பெயரால் வழங்கப்படுகிறது. உலக பத்திரிகை சுதந்திர நாளை முன்னிட்டு மே.3 அன்று தேதி இந்த விருது வழங்கப்படுகிறது.

- இந்த ஆண்டு, கொலம்பிய புலனாய்வு இதழாளர் ஜினெத் பெடோயா லிமா, UNESCO / கில்லர்மோ கேனோ உலக பத்திரிகை சுதந்திர பரிசுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவரது படைப்புகள், நாட்டில் ஆயுதக்கிளர்ச்சி & பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் குறித்து கவனம் செலுத்துகின்றன.

**9.ஆப்பிரிக்க பன்றிக்காய்ச்சலின் முதல் பாதிப்பு, எந்த இந்திய மாநிலத்தில் கண்டறியப்பட்டுள்ளது?**



அ. பீகார்

ஆ. ஜார்க்கண்ட்

**இ. அஸ்ஸாம் ☑**

ஈ. மணிப்பூர்

- சுமார் 2,500 பன்றிகளின் உயிரிழப்புக்கு காரணமான ஆப்பிரிக்க பன்றிக்காய்ச்சலின் முதல் பாதிப்பு, அஸ்ஸாம் மாநிலத்தில் பதிவாகியுள்ளது. பாதிக்கப்பட்ட பன்றிகளை உடனடியாக கொன்றொழிப்பதற்கு மத்திய அரசு அனுமதியளித்திருந்த போதிலும் மாநில அரசு அதனை மேற்கொள்ளவில்லை. பன்றிக் காய்ச்சல் விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவாது என்றும், அந்நோயைத் தடுப்பதற்கான மாற்று வழி ஒன்றை மாநிலம் மருத்துவத் துறை தயாரித்து வருவதாகவும் அம்மாநிலம் அறிவித்துள்ளது. சுமார் 21 இலட்சம் உள்நாட்டு பன்றிகளின் எண்ணிக்கையுடன் வடகிழக்கில் பன்றி இறைச்சி சந்தையில் அஸ்ஸாம் முன்னிலை வகித்துவருவது குறிப்பிடத்தக்கது.

**10. 1927ஆம் ஆண்டு இந்தியக் காடுகள் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தத்தின்மூலம், 'மரம்' பிரிவிலிருந்து நீக்கப்பட்ட தாவர இனம் எது?**



அ. சீமை ஆல்

ஆ. சீமைக்கருவேலம்

**இ. மூங்கில் ☑**

ஈ. வாழை

- 1927ஆம் ஆண்டு இந்தியக் காடுகள் சட்டத்தைத் திருத்தி, 2017ஆம் ஆண்டு இந்தியக் காடுகள் (திருத்தம்) சட்டத்தை இந்திய அரசு நிறைவேற்றியது. அது, மூங்கிலை 'மரம்' என்ற பிரிவிலிருந்து நீக்கியது. மேலும், கானிலிருந்து கொண்டுவரப்படும் வெட்டப்பட்ட / வீழ்ந்துகிடந்த மூங்கிலை, 'வெட்டப்பட்ட மரம்' எனக் கருதக்கூடாது எனவும் அறிவித்தது. அண்மையில், வடகிழக்கு பிராந்தியத்தின் மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங், காணொளிவழியில் மூங்கில் மாநாட்டில் உரையாற்றினார். நமது நாட்டின் COVID–19 நோய்த்தொற்றுக்குப் பிந்தைய பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு மூங்கில் இன்றியமையாதது என அவர் அப்போது எடுத்துரைத்தார். பொது முடக்கத்துக்கு இடையே கடந்த ஏப்ரல்.16 முதல் மூங்கில் தொடர்பான நடவடிக்கைகளை செயல்படுத்த உள்துறை அமைச்சகம் அனுமதித்தது குறிப்பிடத்தக்கது.

# நடப்பு நிகழ்வுகள்

## 1. 'UV Blaster' என்ற புற ஊதா கிருமிநீக்க கோபுரத்தை உருவாக்கியுள்ள அமைப்பு எது?

அ. ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட்

**ஆ. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு ☑**

இ. பாரத மிகுமின் நிறுவனம்

ஈ. பாரத் மின்னணு நிறுவனம்

- நோய்த்தொற்று அதிகம் பாதிக்கக்கூடிய பகுதிகளில், வேதிக்கலப்பில்லாத துரித கிருமி நீக்கத்துக்கான புற ஊதா கிருமி நீக்க கோபுரத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பு உருவாக்கியுள்ளது. "புற ஊதா வெடிப்பு" என்ற பெயருடைய இந்த உபகரணம், புற ஊதா அடிப்படையிலான கிருமி நாசினி ஆகும். இதனை, குருகிராமில் உள்ள நியூ ஏஜ் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் & மெட்டீரியல்ஸ் என்னும் தனியார் நிறுவனத்தின் உதவியுடன், பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பின் தில்லியைச் LASTEC எனும் முதன்மை ஆய்வுக்கூடம் வடிவமைத்து உருவாக்கியுள்ளது.

- இரசாயன முறையில் கிருமிநீக்கம் செய்யவியலாத ஆய்வுக்கூடங்கள் மற்றும் அலுவலகங்களில் உள்ள கணினிகள், சிறு பொறியமைப்புகள், மின்னணு சாதனங்கள் போன்ற தொழில்நுட்ப சாதனங்களின் மேற்பரப்புகளில் தொற்று நீக்குவதற்கு இந்தப் புற ஊதா உபகரணம் பயன்படும். மக்கள் அதிகமாகக் கூடும் வானூர்தி நிலையங்கள், வணிக வளாகங்கள், மெட்ரோ இரயில்கள், அலுவலகங்கள் போன்ற பகுதிகளில் இது சிறந்த முறையில் பயனளிக்கும்.

## 2. அசோசியேடட் பிரஸ்'இன் நிழற்படக்கலைஞர்களான தர் யாசின், முக்தார் கான் மற்றும் சன்னி ஆனந்த் ஆகியோர், அண்மையில் எந்த விருதைப் பெற்றதற்காக செய்திகளில் இடம்பிடித்தனர்?

**அ. நிழற்படத்திற்கான புலிட்சர் பரிசு ☑**

ஆ. டாய்ச் வெல்லே பத்திரிகை சுதந்திர விருது

இ. நிக்கி ஆசியா பரிசு

ஈ. UNESCO / கில்லர்மோ கேனோ உலக பத்திரிகை சுதந்திர பரிசு



- அமெரிக்க இதழாளர் ஜோசப் புலிட்சர் நினைவாக இதழியல் துறையில் சிறந்து விளங்குவோருக்கு ஆண்டுதோறும் புலிட்சர் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. அமெரிக்காவின் நியூயார்க் நகரில் செயல்படும் கொலம்பியா பல்கலைக்கழகத்தால் இந்தப் பரிசு வழங்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான புலிட்சர் பரிசு பட்டியல் சமீபத்தில் வெளியிடப்பட்டது. இதழியல், நாடகம், இசைத்துறையின் 23 பிரிவுகளில் புலிட்சர் பரிசு அறிவிக்கப்பட்டது. இதில், இதழியல் துறையின் நிழற்படப் பிரிவில் காஷ்மீரைச் சார்ந்த சன்னி ஆனந்த், முக்தார் கான், தர் யாசின் ஆகியோர் புலிட்சர் பரிசுக்கு தேர்வுசெய்யப்பட்டனர்.

- 370$_{ஆவது}$ சட்டப்பிரிவு ரத்து செய்யப்பட்ட பின்னர், காஷ்மீரில் நடந்த ஆர்ப்பாட்டங்கள், ஊரடங்கு உத்தரவு & மோதல்களின் சிறந்த புகைப்படத்திற்காக இம்மூவரும் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர். அசோசியேடட் பிரஸ் பெறும் 54$_{ஆவது}$ புலிட்சர் பரிசு இதுவாகும். கடந்த ஆண்டு கதைகள், நிழற்படங்கள், காணொளி பிரிவில் இந்நிறுவனம் புலிட்சர் பரிசை வென்றது.

**3. 2020 மே மாதம் நடைபெற்ற அணிசேரா இயக்கத்தின் (NAM) காணொளிவழி உச்சிமாநாட்டின் கருப்பொருள் என்ன?**

அ. Global Economy

**ஆ. United against COVID-19 ☑**

இ. Stakeholders for a Cohesive and Sustainable World

ஈ. Upholding the Bandung Principles

❖ COVID-19 நோய்த்தொற்றால் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்து விவாதிப்பதற்காக, அணிசேரா இயக்க (NAM) தொடர்புக்குழுவின் இணையதள மாநாடு மே.4 அன்று நடைபெற்றது. இதில் பிரதமர் மோடி கலந்துகொண்டார். "COVID-19 தொற்றுநோய்க்கு எதிராக ஒன்றிணைவோம்" என்ற கருப்பொருளின் அடிப்படையில் 'NAM' தொடர்புக்குழுவின் மாநாடு, அந்த இயக்கத்தின் இப்போதைய தலைவரான அஜர்பைஜான் குடியரசின் அதிபர் இல்ஹாம் அலியேவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

❖ இம்மாநாட்டின் நோக்கம், இக்கொள்ளை நோயை ஒழித்துக்கட்டவும், COVID-19 தொற்றுக்கு எதிராக சர்வதேச ஒற்றுமையை மேம்படுத்துவது மற்றும் நாடுகள், சர்வதேச அமைப்புகளின் சக்திகளை ஒன்று திரட்டுவது ஆகியவை ஆகும். மேலும், இந்நிகழ்வில் பன்னாட்டு பன்முகத்தன்மை & அமைதிக்கான இராஜாங்கரீதியான நடவடிக்கைகள் ஆகியவையும் நினைவுகூரப்பட்டன.

**4.தலைமை எஃகு தொழிற்துறை அமைப்பான இந்திய எஃகு சங்கத்திலிருந்து வெளியேறியுள்ள எஃகு நிறுவனம் எது?**

அ. J S W ஸ்டீல்

**ஆ. TATA ஸ்டீல் ☑**

இ. ஆர்சலர் மிட்டல் நிப்பான் ஸ்டீல்

ஈ. ஜிண்டால் ஸ்டீல் & பவர் லிமிடெட்

❖ நாட்டின் முன்னணி எஃகு உற்பத்தியாளர்களில் ஒருவரான டாடா ஸ்டீல் சமீபத்தில் இந்திய எஃகு சங்கத்திலிருந்து தனது உறுப்புத்துவத்தை விலக்கிக்கொண்டது. டாடா ஸ்டீலின் தலைமை நிர்வாக அதிகாரியும் மேலாண்மை இயக்குநருமான இந்திய எஃகு சங்கத்தின் தலைவராகவும் இருந்த T V நரேந்திரனும் அந்தப் பதவியிலிருந்து விலகினார். JSW ஸ்டீல், இந்திய எஃகு ஆணையம் (SAIL), இராஷ்டிரிய இஸ்பத் நிகாம் லிட், ஜிண்டால் ஸ்டீல் & பவர் லிட் மற்றும் ஆர்சலர் மிட்டல் நிப்பான் ஸ்டீல் லிட் ஆகியவை இந்திய எஃகு சங்கத்தின் பிற உறுப்பினர்களாகும்.

**5. 2023ஆம் ஆண்டுக்கு மாற்றியமைக்கப்பட்டுள்ள 2021ஆம் ஆண்டு காமன்வெல்த் இளையோர் விளையாட்டுப் போட்டிகள், முன்பு எந்த நாட்டில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது?**

அ. கம்போடியா **ஆ. டிரினிடாட் & டொபாகோ ☑**

இ. கயானா ஈ. ஜமைக்கா

- 2021 காமன்வெல்த் இளையோர் விளையாட்டுப் போட்டிகள் என்பது இந்தப் போட்டிகளின் ஏழாவது பதிப்பாகும். இது, 2021 ஆக.1–7 வரை கரீபியன் நாடான டிரினிடாட் மற்றும் டொபாகோவில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. COVID–19 தொற்று நெருக்கடி காரணமாக டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளும் 2021ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

- 2021ஆம் ஆண்டு காமன்வெல்த் இளையோர் விளையாட்டுப் போட்டிகளும் 2023ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இவ்விரு உலக விளையாட்டுப் போட்டிகளும் இடையில் எந்த விதமான மோதல்களும் ஏற்படாமலிருப்பதற்காக இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

**6. COVID–19 தொற்றுநோய் சிகிச்சையில் ஒரு முக்கியமான படியாகக்கருதப்படும், "மோனோக்ளோனல் நடுநிலைப்படுத்தும் நோயெதிர்ப்புப்பொருளை" வெற்றிகரமாக தனிமைப்படுத்தியுள்ள நாடு எது?**

அ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஆ. சீனா

**இ. இஸ்ரேல் ☑**

ஈ. இத்தாலி



- இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சரின் கூற்றுப்படி, இஸ்ரேலின் முக்கிய உயிரியல் ஆராய்ச்சி ஆய்வகமான இஸ்ரேல் உயிரியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் (IIBR), 'மோனோக்ளோனல் நியூட்ரலைசிங் ஆன்டிபாடி' எனப்படும் ஒரு முக்கிய கொரோனா வைரஸ் நோயெதிர்ப்பியை தனிமைப்படுத்தியுள்ளதாக இஸ்ரேல் அண்மையில் அறிவித்தது. இந்நடவடிக்கை, COVID–19 தொற்றுநோயின் சாத்தியமான சிகிச்சை முறையின் குறிப்பிடத்தக்க படியாகக்கூறப்படுகிறது.

- இந்த நோயெதிர்ப்பியால் நோயாளிகளின் உடலுக்குள் நோயை உருவாக்கும் கொரோனா வைரஸை அழிக்கமுடியும் எனக்கூறப்படுகிறது. மோனோக்ளோனல் நோயெதிர்ப்பி (ஒரு செல்லிலிருந்து பெறப்பட்ட–டது) தனிமைப்படுத்தப்படுவது இதுவே முதல் நிகழ்வாகும். பிற பகுதிகளில், பலகோண நோயெதிர்ப்பி தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

**7.வடகொரிய அதிபர் கிம் ஜாங் உனுக்கு 2ஆம் உலகப்போரின் நினைவுப்பதக்கத்தை வழங்கியுள்ள நாடு எது?**

அ. ஜெர்மனி

**ஆ. இரஷ்யா ☑**

இ. ஜப்பான்

ஈ. தென் கொரியா



- 2ஆம் உலகப்போரில் நாஜி ஜெர்மனியைத் தோற்கடித்த எழுபத்தைந்தாவது ஆண்டு வெற்றியைக் கொண்டாடும் வகையில், வடகொரியாவில், இரஷ்ய படைவீரர்கள் கொல்லப்பட்ட நினைவிடத்தைப் பாதுகாத்து வருவதற்காக வடகொரிய அதிபர் கிம் ஜாங் உனுக்கு இரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் 2ஆம் உலகப்போரின் நினைவுப்பதக்கத்தை வழங்கி கௌரவித்துள்ளார்.

**8.உலகெங்கிலும் மே மாதத்தில் வரும் முதல் செவ்வாய்க்கிழமை எந்த நாளாக அனுசரிக்கப்படுகிறது?**

அ. உலக ஜாஸ் நாள்

ஆ. உலக நடன நாள்

**இ. உலக ஆஸ்துமா நாள் ☑**

ஈ. உலக புத்தாக்க நாள்

❖ இளைப்புநோய் குறித்த விழிப்புணர்வை அதிகப்படுத்தவும், உலகெங்கிலும் இளைப்புநோயுடன் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாகக்கொண்டு, ஒவ்வோர் ஆண்டும் மே மாதம் வரும் முதல் செவ்வாய்க்கிழமையில் உலக இளைப்புநோய் நாள் கடைபிடிக்கப்படுகிறது. இளைப்புநோய் என்பது நுரையீரலில் சுவாசப்பிரச்சனையை ஏற்படுத்தும் ஒரு நாட்பட்ட நோயாகும். இந்நோய் பொதுவாக இருமல், மார்பிறுக்கம், மூச்சுத்திணறல் போன்ற அறிகுறிகள்மூலம் தோன்றும். "Enough Asthma Deaths" என்பது நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

**9. CKP கூட்டுறவு வங்கியின் உரிமத்தை இந்திய ரிசர்வ் வங்கி இரத்துசெய்துள்ளது. இந்த வங்கியின் தலைமையிடம் எங்கு அமைந்துள்ளது?**

அ. சென்னை

ஆ. சண்டிகர்

**இ. மும்பை ☑**

ஈ. வாரணாசி

❖ சமீபத்தில், CKP கூட்டுறவு வங்கியின் உரிமத்தை இந்திய ரிசர்வ் வங்கி இரத்துசெய்தது. மும்பையை தலைமையிடமாகக்கொண்டுள்ள இவ்வங்கி, மும்பை மற்றும் தானே மாவட்டங்களில் கிளைகளைக் கொண்டுள்ளது. இவ்வங்கியின் நிதிநிலை பலவீனமடைந்த காரணத்தால், நாட்டின் ரிசர்வ் வங்கியால் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த வங்கிக்கான புத்துயிரளிப்புத் திட்டமோ / வேறொரு வங்கியுடன் இணைப்பதற்கான யாதொரு திட்டமோ இல்லை என்றும் ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

**10.ஆர்டிக் காலநிலை & சுற்றுச்சூழலைக் கண்காணிப்பதற்காக, 'Arktika–M' என்ற தொலையுணர்திறன் செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தவுள்ள நாடு எது?**

அ. சீனா

**ஆ. இரஷ்யா ☑**



இ. ஜெர்மனி

ஈ. அமெரிக்க ஐக்கிய நாடுகள்

❖ இரஷ்ய விண்வெளி மையத்தின் அண்மைய அறிவிப்பின்படி, ஆர்டிக் காலநிலை & சுற்றுச்சூழலைக் கண்காணிப்பதற்காக இரஷ்யா தனது முதல் 'Arktika–M' செயற்கைக்கோளை விண்ணில் செலுத்த உள்ளது. இந்தச் செயற்கைக்கோளின் முதல் பதிப்பு உருவாக்கப்பட்டு, அது இந்த ஆண்டு ஏவுவதற்கு தயாராகவுள்ளது. அதேவேளையில், இரண்டாவது செயற்கைக்கோள் 2023ஆம் ஆண்டில் ஏவப்படும். தொலையுணர்திறன் செயற்கைக்கோளான, 'Arktika–M' புவியின் துருவப்பகுதி வானிலையைக் கண்காணிக்கும் & துல்லியமான வானிலை முன்னறிவிப்புக்கு உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.